August 1911. Registered No. M. 925.

செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.
ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-ஆண்டு ஆவணி-மீ 1-உ [பகுதி 5.

உள்ளுறை. பக்கம்

தமிழ் மொழியின் பழமை.	97
செல்வம்.	99
நட்பு.	102
பௌத்தமதம்.	104
"தமிழ் மறை" யனுதித்துவம்.	106
நாம் முன்னுக்குவரத் தடையாயிருப்பவை.	107
இதுவே தேசாபிமானி செய்யவேண்டியது.	108
மூலாதாரக் கல்வியைப் பற்றின மசோதாக்கள்.	110
விநோதக்கூற்று.	112
உலகப்பிரசித்திபெற்ற பண்டித ராமபாய்.	113
நமது நாட்டுப் பெண்மணிகளின் தற்கால நிலைமை.	115
புத்தக வரவுகள்.	118
சமாச்சாரக்குறிப்புகள்.	120

பத்திராதிபர்:—பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை,
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1.
தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2.
தனி சஞ்சிகை அணா. 2.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.
அரைப் பக்கத்துக்கு 0—8—0.

லெக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

செந்தமிழ்ச் செல்வம்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1.] விரோதிகிருது ௵ ஆவணி ௴ 1-௨ [பகுதி-5

தமிழ் மொழியின் பழமை.

தமிழ் மொழி படைப்புக் காலத்தே நிலத்தொடு படைக்கப்பெற்று இன்றும் நின்று நிலவி விளங்கும் மொழியாம்.

இது இயற்கை மொழி என்று எவராலும் எடுத்துப் புகழப்பெறும் இயலமை மொழியாம்.

இயற்கை மொழியாவது, தன்னை யொருவர் இயற்றாமல் உலகத்தின் படைப்புக்காலத்திருந்து தோற்றமுற்றெழுந்து மக்களாற் பயிலப்பெற்றுக் குற்றமறத்தொன்று தொட்டு வழங்குவது என்பர்.

இதனை,

" முன்ன ரியற்கை மொழியென்ற—றன்னை
யொருவ ரியற்றா துயர்படைப்பு நாளான்
வருமக்க ளெப்பொருட்கும் வாய்பா—டுருப்படுத்துத்
தந்நிலத்தே தொன்றுதொட்டுத் தானே பெருவழக்காப்
பன்னிலப்பாட் டெம்மியலும் பண்சுவையு—மின்னவெழின்
மன்னியெவ் வாற்றும் வடுவிகந்த தென்பாது
கன்னித் தமிழேயோ காரணியே " என்ற
" தமிழ் விடுதூதின் " ஆசிரியர் கூற்றானும் அறியலாம்.

இன்னும் தமிழ் மொழியானது பாலிமொழி, கீர்வாணமொழி, [illegible] ஆகிய இவற்றிற்கும் மிக மிக முந்தியே தோன்றும்.

இதனை

" முன்னிகழ்ந்த பாலி மொழியுங்கீர் வாணமுந்
துன்னுங் கருப்பையிலே தோய்வதற்கு—முன்னரே
பண்டைக்கா லத்தே பரவைகொண்ட முன்னூழி
மண்டலத்தி லேபேர் வளநாட்டின்—மண்டுநீர்ப்
போரற் றருகிற் பிறங்கு மணிமலையிற்
சீரற்றுஞ் செங்கோற் றிறற்செங்கோ—னோரற்றும்,
பேரவையி லேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்ததமிழ்ப் பைந்தேவி ! " (தமிழ்விடுதூது)

என்ற அமுத மொழியானு மறிந்து கொள்க.

இனி இராமாயணகாலத்திருந்த அகத்தியர் தந்த தமிழ் என்றற்குப் போதிய ஆதாரங்களிருக்க, உலகுடன் உதித்தபோழ்திருந்து பயிலப்பட்டுவரும் பண்டை மொழி என்று கூறல் சிறிதும் பொருந்தாது. இது இல்லது கிளத்தல் என்னுங் குற்றமாம் என்பாருமுண்டேல் அவர்களுக்கு ஆதாரமாகும்,

" அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு "
" பொற் பொதிய மாமலையான் மொழி "
" பொற் பொதிய மாமுனி புகன்ற தமிழ் "
" குறுமுனிவனர் தமிழ் " " தமிழ்முனி " " தமிழ்ச்சலதிகண்டோன் " என்ற இன்னோரன்ன புலவர் மொழிகளெல்லாம் உபசார வழக்கென்க. அல்லது உஞ்சுவீகார புத்திர தருமமெனக் கொள்ளினும் அமையும்.

அகத்தியர் காலத்திற்கு முன்னேயே முதற் சங்கத்து திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றெறிந்தமுருகவேளும் தமிழ்பாடினர், சங்கமிரீ இயினரெனத் தெரிகின்றோம்.

இன்னும் அகத்தியர் தமிழைச் சிவபெருமானிடத்தும் முருகவேளிடத்தும் முறையேகற்றுத் தேர்ந்துபின் பொதியத்து வந்து தமிழைப் பரவச்செய்தாரென்றும் ஆன்றோர் வாக்குகள் அளவுபடாதிருந்து முழங்குகின்றன.

அகத்தியர் தென்பால் வருமுன்னரே தமிழ் செப்பமான நிலையிலிருந்தது என்பதற்குத் தக்க சான்று அகத்தியர் சிவபெருமானின் கட்டளைப்படி தெற்கே வரப் புறப்படுமுன் சிவபெருமானை நோக்கி தெற்குள்ளோர் தொடைபெறு தமிழ் வல்லுநர் அவர்கள் கேட்பவற்றிற்கெல்லாம் பதில் சொல்லத் தெரியவேண்டுமே என்ற பொழுது சிவபெருமான் அகத்தியர்க்குத் தமிழை உபதேசித்தருளினர் என்னுங் கருத்தமைந்துள்ள,

" விடைகொடு போவா னென்றை வேண்டின னெகுந் தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டி
னிடைபயின் மாந்த ரெல்லா மின்றமி ழாய்ந்து கேள்வி
யுடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும் "

" சித்தமா சகல வந்தச் செந்தமி ழியனூ றன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனே முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னு
நித்தனே யடியேனென்று நின்னடிகாண்பே னென்றான் "

என்ற திருவிளையாடற்புராணப்பாக்கள் உண்மை கூறும்.

இது நிற்க,

அகத்தியர் குமாரக்கடவுளினிடத்து இலக்கணம் கற்றுக்கொண்டனரெனபதற்கு ...

“போற்றி போற்றி யென்றேத்திய முனிவனைப் பொருவில்போதக
[ேருக்கிச்
சாற்று வேண்டியதருகுதுமெனச்சது மறையவன் சிரத்தொடுங்கை
யேற்ற வெம்பிரான்றமிய னேற்கருளியவின்றமிழதன் கூற்றை
வீற்றுற விரித்தருளென்றலும் விளம்பலுற்றனன் மேலோன்.”
நந்துவிந்துவிலுயிர்த்த சூக்குமைமுதல் வாக்குநால்வகைத்தாகி
யுந்துதானதனுதித்த வனங்களோ ரொன்றுடனையானில்
வந்தவின்பமேதமிழது மாதனை மாமறைப்பொருளா
வெந்தைநல்கநீ பெற்றனை யருந்தவமுபன்றுமேயோ.

* * * * *

* * * * *

நீதெரிந்திடென்றவற்றுள விரிநிகத்திடதிகாரம்
சோதிலிங்கத்தனவரன்முறை புணர்த்திவேற்குழகனேகினன்கோயில்”
என்ற பழநித்தலப்புராணச் செய்யுள்கள் போதிய ஆதாரமாகும்.

இன்னும்தமிழ்ப்பழமையது என்றற்குச்சங்கத்துநூற்களும் மற்றைய நூற்களும் பகர்ந்துள்ளவற்றை எல்லாம் எடுத்தெழுதுவதென்றால் மிகுந்து விரியும். ஆதலால் அன்பர்கள் தமிழின் சிறப்பையும் இனிமையையும் தொன்மையுங்கருதி அதினிடத்தன்பு கொண்டு கற்றுப்பயன்பெறுவாராக. சுபம்!

பத்திராதிபர்.

செல்வம்.

செல்வம் கல்விச்செல்வம் பொருட் செல்வம் என இரு வகைப்படும்.

“ கல்விபுடைமை பொருளுடைமை என்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும் ”

என்ற நீதிநெறிவிளக்கச் செய்யுளின் இரண்டடிகள் இதனை மெய்ப்பிக்கும்.

அவற்றுள் ஈண்டு எடுத்துக்கொண்டது எதனையோ எனின் இரண்டாவதாகக்கூறிய பொருட்செல்வத்தை என்க.

இனி, பொருள் என்றது எதனையோவெனின் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு முதலிய லோகப்பொருள்களையும், வைரம், இரத்தினம், மாகதம், வைடூரியம், கோமேதகம், முத்து, பவளம், நீலம் முதலிய ரத்தினங்களையும், வீடு, மனை, வாசல், வயல், தோட்டம்முதலிய நிலப்பொருள்களையும், *மனைவி, மக்கள், சுற்றத்தார், துணைவர், படை

---

* இதனைத் தேசங்களுக்குத் தக்கபடி கொள்க. மனைவி பிள்ளைகளை விற்றும் பொன், வெள்ளி, தானியம், நிலம், உணவு பெறுவாருமுண்டு.

ஞர், ஏவலர், அடிமைகள் முதலிய மனிதத்துணைகளையும், ஆடு, மாடு, குதிரை, யானை முதலிய வீட்டு மிருகங்களையும், கோழி, சேவல், புறா, மயில், குயில், கிளி, முதலிய பட்சிகளையும், ஆடை ஆபரணங்களையும், இன்னும் பண்ட பலாதிகளையும், மற்றும் ஒருவன் வாழ்நாளில் அவன் வாழ்வுக்கு உதவியாக உள்ள எல்லா உபகரணங்களையுமாம்.

இதனை

“ மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந் தன் வாயின்மட்டே ”

“ மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாம் ”

“ ஆத்தமும் வாழ்வும் அகத்து மட்டே ”

என்றற்றொடக்கத்துப் பட்டினத்தடிகளின் பாக்களினடிகளாற் றெளிக.

“ பொருளிலார்க்கிவ்வுலகமில்லை. ” என்ற பெரியாரின் வாக்கு இங்கு பெரிதும் கவனிக்கத்தக்கது. ஒருவன் பொருளில்லா திருப்பின் உலகிற் காலஞ் செலுத்துதலென்பது கூடாததொன்றாம். இது பற்றியன்றோ இன்னும் நம்மவருள் “பணமில்லான் பிணமென்னும்.” முதுமொழி வழங்கி வருகின்றது.

தெய்வப்புலமை ஒளவையும் தமது திருவாக்கால் “ ஆலைகமுங் காசும், சிக்கெனத்தேடு ” என்று மொழிந்துள்ளாள். புருஷார்த்தமம் என நம்மவர் கூறுவதில் பொருமொன்றல்லவா?

இவ்வுலகில் ஒருவன் பெறக்கூடியது அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு. அறஞ்செய்தற்கும் இன்பம் பெறுதற்கும் பொருளின்றி முடியாதென்பது பெரும்பாலாரபிப்பிராயமன்றோ?

இன்னும் அறவழியாற் பொருள் சம்பாதித்து அறவழியிற் செலவிட்டு இன்பத்தை மெய்திஞர்க்கு வீடு கிட்டுதற்குஞ் சந்தேகமுண்டோ?

இன்னும் பொருளுடையான் கல்வி ஞானம் முதலியவற்றைப் பெறுதல் மிக இலேசன்றோ?

“பொருளுடையான் கட்டேபோகம்” எனப்பெரியோர் மொழிந்துள்ளது அனுபோக மொழியன்றோ?

இல்வாழ்வுடையானுக்குப் பொருளின்றேல் நல்வாழ்வாமோ? பொருளில்லான் நல்லறமாகிய இல்லறத்தை எவ்வாறு நடத்துவன்?

இதுபற்றியன்றோ பொருளிலக்கணத்தும் அகப்பொருளில் தலைவன் தலைவிகளின் பிரிவுகளைக்கூறிய இடத்து “பொருள்வயிற் பிரிவு” என்பதைச் சுட்டியிருக்கின்றனர்.

தலைவன், கல்வியிற் பிரிதற்குரியன் என்றதற்கடுத்துத் தலைவன் பொருள் வயிற்பிரிதற்குமுரியன் என்றார். இது தமிழ் அகப்பொருளிலக்கண ஆராய்ச்சியுடையார்க்குத் தோன்றாமற் போகா. ஆகையால் மக்களுக்கு இல்லற நடாத்துதற்குப் பொருளின்றியமையாத தொன்

ளும். இதுபற்றியன்றோ ஒளவையாரும் "திரைகட லோடியுந் திரவியந்தேடு" என்றருளியுள்ளார்.

ஆகையால், ஆரியமணிகளே! பொருள்தேட முயற்சியுங்கள். பொருளை எந்த வழியிலுந்தேடுதல் கூடாது. அறவழியிலே நின்று தேடுவதே பொருளாகும்.

அறவழியல்லாப் பிறவழியிற் றேடுவது நமது இன்பையறுக்கும் அரமாகும். பிறர் அழும்படிச்செய்து சம்பாதித்தது, பொருளை இழந்தழுவாரினும் பன்மடங்கு துயருற் றழுது கழியும்படிச்செய்து விட்டு ஓடிவிடும். ஆகையால் அறவழியாலேயே பொருளை ஈட்டுமின். உயிர்களிடத்து அன்பும் அருளும் காட்டுமின். சற்பாத்திரத்தில் செலவு செய்து மண்ணுலகிற் புகழை நாட்டுமின்.

இதனானே உங்களுக்கு எஞ்சலில்லா இன்பம் எய்தும். ஐயமற வீடு சித்திக்கும்.

அருளின்றி வீடுபெறுதல் கூடாது. அருளும் பொருளாலேயே வளரும். இதனை

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச்செவிலியா லுண்டு"

என்ற மெய்வேதம் விளக்குவிக்கும்.

"குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டு ளேற்றுப் பனை" என்றபடியாகாமல் நீங்கள் செல்வத்தை யறவழியாற் பெற்றாலும். அல்லது பூர்வ புண்ணியவசத்தால் முயற்சியின்றிச் செல்வங்கிடைத்தாலும், அறவழியிற் செலவிடுங்கள்.

உங்களுக்கும் உங்கள் சுற்றத்தார்க்கும் உங்கள் நாட்டார்க்கும் நன்மை பயக்குங் காரியங்களிலும் பொது நன்மைக்கேற்ற காரியங்களிலும் செலவிட முந்துங்கள்.

இன்றைந்த கிணற்றில் நீர் சுரப்பது போல அறவழியிற் செலவிடுவார் செல்வம் மேலும் மேலும் பெருகும். இம்மை மறுமைப்பயன்கள் எல்லாம் சித்திக்கும்.

அறவழியிற் செலவிடாமல் இருகப் பிடித்து வைத்தாலும் பொருள் நிற்பதில்லை என்று உங்களுக்குத் தெரியாததா?

"நிறைசெல்வ நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்"

என்ற குமர குருபர சுவாமிகள் திருவாக்கும்,

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுறையார் மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்"

என்ற சமணமுனிகள் வாக்கும் நினைத்துப் பிறந்ததன் பயனை வீணாக்காது உய்மின்.

செல்வஞ் செய்மின். செவ்வையாய்ப் பேணுமின்.

அறவழியிற் செலவுசெய்மின். அவ்வாறு செய்யின் தேவலோகத்துள்ள தேவரும் நுமக்கு நிகராகார்.

A. S. ஆறுமுகம் பிள்ளை.
உதவிக் காரியதரிசி
S. P. G. கழகத்துமாணவர் தமிழ்ச்சங்கம், திரிசிரபுரம்.

நட்பு.

நட்பு, சிநேகம், கேண்மை, தொடர்பு இவையொரு பொருட்கிளவி.

1. நட்பென்பது எத்தன்மையுடையதென்று விசாரிக்கப் புகுந்தால் இவ்வுலகின் அரியமானிடதேகமெடுத்தவர்களின் உத்தமஇலக்கணங்களின் ஒன்று.

நட்பாவது ஒருவருடன் ஒருவர் கலப்பது.

அழிதருநெறியிற்செலவினைவிலக்கியாம் வழிச்செலுத்தியூழ்வினையால்
அழிவுவந்தடுப்பினதற்குடனல்லாந்தாக்கைவேறன்றியாருயிர்க [லக்
கொழிவகையின்றியுணர்ச்சியொத்தருநூலுணர்தொறுமுறுநயம்பெருக
கழிமகிழ்நாளும்பயிறொறும்வளரக் கலப்பதேநட்பெனப்படுமால்

என விநாயகபுராணங்கூறுவதும் ஈங்கறியத்தக்கது.

2. இந்நட்பானது இயற்கைநட்பு, செயற்கைநட்பென்று இருவகைப்படும்.

இயற்கைநட்பாவது:—பிறப்புமுறை யானுயதூஉம் தேயமுறை யானுயதூஉமென விருவகைப்படும். இவ்விரண்டில்முன்னையது சுற்றத்தோடொன்றுவது பின்னையது பிறந்ததேசத்தாலாகிய ஒற்றுமை. பட்டணத்தார்கள் என்றதைப்போல செயற்கைநட்பாவது முன்செய்த வுதவிபற்றிவரும் நட்பாம். இவ்விரண்டில் செயற்கைநட்பே மேலாயது.

3. இந்நட்பு உலகினர்க்கின்றியமையாதது. செயற்கரியன நட்பைவிடவேறில்லை. எப்படியெனில், நட்புச்செய்தற்காவாரைப் பெறலும், பெற்றாற் செய்யுமுபாயமும், செய்தாற்றிரிபின்றி நிற்றலுமுதலிய வரியவாகலின், இதுபற்றியன்றோ நம் செந்நாப்போதாருந் தம் தமிழ்மறையில் "செயற்கரியயாவுளநட்பின்" என்றார், அக்கேண்மை முதிரப்பழகினால் பொருந்தலர்களு மன மிரிந்திடுவாராதலால் அதுபோல் வினைக்கரியயாவுளகாப்பு என்றும் வனைந்திருக்கின்றனர்.

இத்தொடர்பைச் செயப்புகுந்தால் முதலில் நட்பாராய்ந்து தீ நட்புக் கூடாநட்பிவை யொரீஇ மேலானநட்பைக் கொளல்வேண்டும்.

4. நட்பாராய்தலாவது.—ஒருவருடைய குணத்தையும் அவர்கள் பிறந்த குடியையும் அவர்கள குற்றத்தையுமாராய்ந்து பார்த்தலாம். அவைகளிற் குணமாவது அறநூல்களில் விலக்கியவை நீக்கி விதித்தவைகளாகிய ஈகை பொறை, இவைகளில் ஈடுபட்டு நிற்கும் நற்குணத்தையாய்தும்; குடிமையாவது: தான்பிறந்த குடியைத்தழுவி நிற்குமாம் ஒழுங்கும் எப்படியெனின் (குலத்தளவேயாகுங் குணம் என்றும்) (நிலத்தியல் நீரியலென்னு நீரதால்) என்றும் நம் தமிழ்மூதாட்டியாருங் கல்வியிற் பெரியாராகிய கம்பநாடருங் கழன்றதை இங்கு கவனிக்கில் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதின் விளங்கும். ஆகையால் உயர்குடிப்பிறப்பை யாராய்ந்தும் சுற்றமாவது—தன் குடியைச் சூழ்ந்த இனத்தார்கள்.

மனத்தான்மறுவில ரேனுந்தான்சேர்ந்த
இனத்தாலிகழப்படுவர்—புனத்து
வெறிகமழ்சந்தனமும் வேங்கையும்வேமே
எறிபுனந்தீப்பட்டக்கால் (நாலடியார்)

என்றபடி சுற்றத்தை யாராய்ந்தும்; குற்றமாவது குற்றமில்லாதார் உலகத்தின்மையின்உள்ள குற்றம் பொறுக்குந்தக்க குற்றமுடையாரவென்பதை யாராய்ந்து பார்ப்பது நட்பாராய்தலாம்.)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும்.

என்று சொல்லுவதால் ஆராய்ந்தே நட்பைக்கொளல்வேண்டும்

5. தீநட்பாவது—தீநட்பென்பது தீக்குணத்தாரோடு உளதாய நட்பு குணத்தின்றீமை ஒற்றுமைபற்றி உடையார்மேற்றாய் அதுபின் அவரோடு செய்தநட்பின் மேற்றாயிற்று. குணத்தின்றீமை அதையுடையவர்க்காதலால் (பண்பாகுபெயர்) அத்தீக்குண முடையவருடன் செய்த நட்பிற்காதலால் (பொருளாகுபெயர்) ஆகவே இஃதிருமடியாகுபெயர்) இத்தீநட்பென்பது பொறுக்கப்படாத குற்றத்தை வெளிப்படையாகச் செய்வோரை விடற்பாலதாய நட்பு.)

6. கூடாநட்பாவது.—பகைமையான் அகத்தாற்கூடாதிருந்தே தமக்கு வர்க்குமிடம் பெறுந்துணையும் புறத்தாற் கூடிபொழுகுவார் நட்புக்கூடா நட்பெனப்படும்) நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு, மூன்றும் முறையே மூன்றுவிதமாயுளது. நட்பாராய்தல் ஒழுங்கான நட்பையடைவதற்கு முதற்படியாயுளது. தீநட்பு இக்குணத்தையுடையாரைஎவ்வாற்றானு நீக்குதலே யுரித்தான தன்மையுடையது. கூடாநட்பு நம்முடன் கூடியிருந்தே கொல்லுந்தன்மை யுடையதாதலால் கூடாநட்பாளரோடு நாமுங்கூடா நட்பாகவேயிருந்து சமயம் வாய்த்துழிக் கொல்லுதலே தகுதியுடையது. இக்கூடா நட்பானது அகத்தாற்கூடாவிடினும் புறத்தாற் கூடினும் அஃதும் நட்புத்தானே நட்

யிவ்விதஞ் செய்பலாமோவெனிற் செய்யலாம் அஃதெப்படியெனின் (மிகச்செய்து தம்மெள்ளுவாரை நகச்செய்து நட்பினுட் சாப்புல்லற் பாற்று) மாதர்க்கிதங்க விவாணர்க்குச் சாலவணக்கங்குரு என்ற மூதுரைகளைக் கவனிக்கிற் கரதலாமலகம்போல் விளங்கும்.)

(தொடரும்)

சோ. சிங்காரவடிவேல்வன்னியமுண்டார்
அக்ராசனதிபதி.
இயற்றமிழ்சங்கம்
கச்சமங்கலம்.

பௌத்தமதம்.

பௌத்தர் சரித்திரம்:—

பௌத்தர், அயோத்தியை என்கிற கோசலர்கள் பூமிக்குச் சமீபத்திலிருந்த சாக்கியர்கள் என்னும் ஜனங்களுடைய சிற்றரசனான சித்தோதனன் என்பவருக்கு 567ல் (B. C) கி. மு. பிறந்த பிரியமுள்ள புத்திரர். அவர் சிறு வயதிலேயே உலகத்திலும் அதன் விஷயங்களிலும் ஓர் விதப்பற்றுதலுமில்லாமல், மனிதன் சுகதுக்கங்களையும் வாழ்வையும்பற்றி மட்டுமே சிந்திக்கலானார். அவருக்கு பதினெட்டாவது வயதிலேயே விவாகம் நடந்து, பிறகு பத்துவருஷங்களுக்கெல்லாம் ஒரு பிள்ளையும் பிறந்தது. இப்பொழுது இவர் பிதாவும் இன்னும் அனைவருமாகக் களிப்புற்று பகுமானங்களையும் பற்பலமரியாதைகளையும் இளவரசன் மனைவிக்குக் காண்பித்தார்கள். பௌத்தரோ கீழ்வருமாறு அதிதுயரமுற்றார். "நாம் உலகைத்துறக்க ஆலோசிக்கின்றோம். அதற்கு தாய், தந்தை, ராஜ்யம், இவைகளெல்லாம் இடையூறுகளாயிருக்கின்றன. அந்தோ, இப்பொழுது ஒரு பிள்ளையும் பிறந்துவிட்டது! இது என் உத்தேசத்திற்கு விருத்தமான பாசங்களுக்கு மற்றொன்றுபோலும் ஆயிற்றே!" இவ்வாறுவிசனமுற்றுக்கொண்டே பௌத்தர் தன் மகன் பிறந்த இரவே, தன் மனைவி வீற்றிருக்கும் அந்தப்புரத்திற்குச் சென்று குழந்தையைப்பார்த்தார். புத்திரவாத்ஸல்யத்தினால் மனமோ கலங்க மைந்தனை கையிலெடுக்க எண்ணினார். ஆயினும் தன் உலகைத்துறக்கவேண்டுமென்கிற உத்தேசமானது தளர்ந்துவிடுமோ என்று பயந்து குழந்தையை எடுப்பதிலிருந்தும் நின்று அந்தப்புறத்திலிருந்து வெளிப்பட்டு தன் வீடுவாசல் ராஜ்யம் அரண்மனை சதுரங்கசைன்யம் இவைகள் யாவற்றையும் துறந்து, அரசன் தலைமகனான பௌத்தர் தெருவில் துறவியாகப்புறப்பட்டார்.

இப்படிச் சந்நியாசி ஆசிரமத்தை யடைந்தபின் மகதராஜ்யஞ் சென்று சிறந்த ரிஷிகளினிடமிருந்து வேதங்களனைத்தும் கற்க மனதிற்கு ஒருவித சமாதானமும் ஏற்படாது, அருகிலிருந்த ஓர் வனத்தைப் பன்னிரண்டு சீடர்களுடன் நாடி, கடுந்தபசு செய்யத்தொடங்கினார். சில வருடங்கள் இவ்விதமாகச்செல்ல, மனிதர்களின் சுகதுக்

ங்களுக்கு காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாது. தவத்தால் காயசோஷணமேயன்றி, மனிதவாழ்வுக்குக் காரணத்தை அறியமுடியாது என்றுகருதி, தபஸைத்துறந்து தான் வேண்டிய ஞானங்கிடைக்காது அதைத்தேடித் திரிந்தனர். இவ்வண்ணம் அங்குமிங்குந் திரிந்து கடைசியில் பிரயாகை(அலகாபாத்து)யைச்சேர்ந்து கொஞ்சம் பிக்ஷை வாங்கிப்புசித்துவிட்டு ஞானமரத்தடியில் (The tree of Wisdom) உட்கார்ந்து மறுபடியுந் தீர்க்காலோசனை செய்யலானார். கருத்த மேகங்களினால் இருண்ட ஆகாயத்தில் வீசும் ஒளிபோலும், இச்சமயத்தில் பௌத்தருடைய கலங்கிய புத்தியில் "தன்னடக்கம்" "பரநேசம்" என்கிற திவ்ய ஞானம் உதித்தது. பௌத்தரும் அந்நிமிஷம் பரமானந்த பூரிதராய், மனசில் இருந்த கலக்கம் நீங்கி, வாழ்வின் சுக துக்கத்தின் பேதத்தை வெறுத்து அதே திவ்ய ஞானத்தைப் பிறர்க்கும் புகட்டுமாறு மானிட வாழ்க்கையின் தத்துவத்தைப்பற்றி உபதேசஞ் செய்யப் புறப்பட்டார்.

இவ்வெண்ணத்துடன் பௌத்தர் முதன்முதல் அக்னி ஹோத்திர யக்ஞ விஷயத்தில் பேர்போன காசியர் என்னும் ஓர் தபோநிதியைக்கண்டு அவரைத்தன் திவ்யஞானத்தினால் அவருடைய யக்ஞ கிருத்தியங்களை விட்டுவிட்டுத்தன் மதக்கொள்கைகளைத் தழுவும்படி செய்தார். அக்காலத்தில் மகதசக்கரவர்த்தியான அஜாத சத்துருவும், காசிபர் முதலான வேதசிரோன்மணிகள் பௌத்தர் அபிப்பிராயத்தைக் கைக்கொண்டார்கள் என்று கேழ்வியுற்று ரொம்பவும் வியப்படைந்து சமீபத்திலிருந்த ஒரு வேணுவனத்தில் பௌத்தருக்கு ஒரு வாசஸ்தானஞ் செய்து கொடுத்தார். இதன்பேரில் பௌத்தர் அவ்விடத்திலிருந்து தன் கொள்கைகளையும் மத அபிப்பிராயங்களையும் ஜனங்களுக்கு உபதேசஞ்செய்துவந்தார். சிறிது காலங்கழிந்தபின் ஊரூராய்ச்சென்று தம் அபிப்பிராயங்களைப் பிரசாரஞ் செய்ததுமன்றி தன் தந்தை சித்தோதனனைப்பார்க்கவேண்டி கபிலவஸ்துக்குஞ் சென்றார். தாய்தந்தைகளோ, பௌத்தர் பிக்ஷாடனஞ் செய்துண்பதைப் பார்க்க அதி துயரங் கொண்டு தங்கள் வீட்டுக்கு வரும்படி பௌத்தரை வினவ, "நாங்கள் பௌத்தர்கள் பிக்ஷை எடுத்துண்பதுதான் முறை" யென்றுசொல்லி பௌத்தர் திரும்பிவிட்டார். இம்மாதிரி பௌத்தர் மாரிகாலத்தில் மகதாவில் வேணுவனத்திலும், இதரகாலங்களில் இடத்துக்கிடஞ்சென்று தன் கொள்கைகளைப்பிரசாரஞ்செய்து வருங்கால் அவர் தந்தை சித்தோதனர் கபிலவஸ்துவில் கி. மு. 517ல் காலஞ்சென்றார். தந்தை இறந்ததின்பேரில் தன் மாதாவையும் மனைவியையும் முதல் முதல் அவருடைய சிஷ்யர் ஆனந்தர் என்பவருடைய வாதத்தின்பேரில் தன் மதத்தில் பிக்ஷுணிகளாகச் சேர்த்துக் கொண்டார். மேற்சொல்லிய வாதத்தில் பௌத்தரே ஸ்திரீகளுக்

கும் தத்துவோபதேசங்கள் செய்யலாமென்றும், அவர்களும் மோக்ஷ ஸாதனங்களைத்தேட யோக்கியர்களென்றும் சொல்லியிருக்கின்றார்.

இவ்வாறு உலகத்தில் எல்லாச்சுகத்தையுந் துறந்து ஸச்சரிதத்தையே மனுஷருடைய துக்கத்துக்கெல்லாம் விஸர்ஜனமார்க்கமென உபந்நியாஸஞ் செய்துகொண்டு கடைசியாக குசிநகரம் என்கிற இடத்தில் வயிற்றுபத்திரவத்தினால் கி. மு. 477. விண்ணுலகடைந்தார்.

பௌத்தர் குணாதிசயங்களைப்பற்றி சுருக்கமாகவும் பூர்த்தியாகவும் சொல்ல எத்தனிப்பது மிக அசாத்தியம். பௌத்தரை கருணாநிதியென்றும் ஆனந்தசாகரமென்றும் மனத்தூய்மையுள்ளவர் என்றும் மட்டும் கூறுவோமாகில் அது அவரைப்போன்ற மகாத்மாவை உத்தேசித்து அற்பவர்ணனையே. அவருக்கு அவர் சகோதரர்களின் பேரிலிருந்த அன்பினாலும் ஜாதிபேதமின்றி நாலு வர்ணாசிரமத்தார்களுக்கும் தான் கண்டுபிடித்த திவ்யஞானமென்கிற திரவியத்தைக் கூசாது கொடையாக்கொடுத்து அவர்களை நல்லவழியில் நடப்பிக்க வேண்டுமென்பதுதான் முக்கிய கருத்து. எல்லோரும் உலகைத்துறந்து பூமியைச்சூனியமாகச் செய்யவேண்டுமென்பது அவர் கருத்தல்ல. அவர்கள் சரியான மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு சன்மார்க்கத்தில் நடந்து உலகவாழ்க்கைக்குச் சம்பந்தமான கவலை, துக்கம் இவைகளைத்தொலைக்கும் வழியைத்தேடவேண்டியது என்பதுதான். அவர் ஒவ்வொருவர் பேரிலும் வைத்திருந்த அன்பிற்கு வேறு நிரூபணம் வேண்டாம். ஒரு தாசியானவள் அவரைத் தன்னகத்தில் பிக்ஷைசெய்யும்படி வேண்டிக்கொள்ள அவர் அவளுக்கு அப்படியே வாக்களித்து பிறகு 'லிச்சாவீஸ்' என்கிற வம்ஸத்து அரசனே அச்சமாசாரம் செவியுற்று அவர் பௌத்தரை அன்றைக்கே தன் கிரகத்திலேயே சாப்பிடும்படி பிரார்த்திக்க, தான் முன்னாடி செய்திருக்கும் வாக்குத்தத்தத்தைத் தெரிவித்து மறுத்துவிட்டார். பின்னும் அவர் குசிநகரத்தில் சரீரத்தியாகஞ் செய்யு முன்னர் கூட ஓர் பிராமணன் அவரது கொள்கைகளின்பேரில் சவிஸ்தாரமாகக் கேள்விகள் கேட்க அத்தருணத்தில் தன் கொள்கைகளை உபதேசிப்பதே ஒரு பெரிய காரியமெனக்கருதி முற்றிலும் அப்பிராமணனுக்கு உபதேசித்துப் பிறகு தேகவியோகமடைந்தார். (இன்னும்வரும்)

S. திருவேங்கடாச்சாரியார், B. A.,
S. P. G. High School, Trichinopoly.

"தமிழ்மறை" யனாதித்துவம்.

1. திருவருட்செல்வமல்கி விளங்கும் மஹா கைலாயத்திலே இருபதுகோடி நீண்டு இருபங்குயர்ந்துள்ள, கோடியே பதினொன்று

லிலட்சத்துப் பதினோராயிரத்து நூற்றுப்பத்து சிகரங்களுக்குநடுவே நவரத்தின சிகரத்தே வீற்றிருக்கும் நம்மஹா சதாசிவமூர்த்தி இப்பிரபஞ்ச சிருட்டி செய்தருளியகாலத்தில் நம்மூலகமாதாவாகிய பராசத்திக்கு 'ஆரியமுந்தமிழுஞ் சொல்லித் தன்னை யுணர்த்துந் தமிழ்ச்சொல்' 'வடசொல்' என்னும் இவ்விரண்டு சுருதிகளையும், அதாவது திவ்வியயாகமங்களையும் வேதங்களையும் கருணைபுரிந்ததாகத் திருமந்திரமாகிய 'தமிழாகமத்தால், ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் காலத்துக்கு அனேக ஆயிரவருடங்கட்கு முன்னர், அறுபத்துமூன்று திருத்தொண்டரி லொருவரும், அம்மஹா கைலாயத்திலிருந்து பொதிகைக்குப்போக விப்பூலோகத்துக்குவந்த ஸ்ரீநந்திதேவர் திருவருள்பெற்ற நான்மறை யோகிகளி லொருவருமாகிய ஸ்ரீதிருமூலதேவர் பின்வருமாறு வெளியிட்டருளினர்.

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
வாரியமுந்த மிழும்முடனே சொல்லிக்
காரிகை யார்க்குங் கருணைசெய் தானே"
"அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் ஏகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டு
முணர்த்து மவனை யுணரலு மாமே"

1. சிமிட்டு—மயக்கம், பிரபஞ்ச சாதனத்தில் சிவகோடிகள் பண்படுமாறும் என்பதாம்.

2. பின்னுந்திருமூலதேவர் வற்புறுத்துவார்:—

"மாலாங்கனே யிங்கியானவந்த காரணம்
நீலாங்கமேனி நேரிழையாளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்கம்வேதத்தைச் செப்பவந்தேனே."

"திருக்கூத்தின் சீலாங்கவேதத்தை" யென்றதனால் பஞ்சக்கிருத்திய நடனத்தைப்பற்றிக்கூறும் வேதம் இத்தமிழாகம மென்றே நிரூபிக்கப்பட்டது கண்டீர். (பின்னும் வரும்)

ஹர. ஷண்முகமுதலியார்,
சைவசித்தாந்தி, சேலம்.

5—8—11.

நாம் முன்னுக்குவரத் தடையா யிருப்பவை.

நம்முடைய க்ஷேமத்திற்குத் தடையாயிருப்பவை, எவ்வெவை யென்பதை யுணராமலே கன்னுபின்னுவென்று வாயில் வந்தபடி குழறிவருகின்றோம்.

1. பெண்களுக்குப்போதுமான கல்வி (ருதுவானபின்புங்கூட) புகட்டாமை.

2. புருஷன் விவாஹமானபின் தன் சம்பாத்தியத்தைக்கொண்டு சிறிதுங் கஷ்டமின்றிக் காலக்ஷேபந் தள்ளக்கூடியவன் தானு வென்பதை யுணராமல் பெண் கொடுப்பது.

3. சுபாசுபங்களில் அளவுக்கு மிஞ்சிப் பணத்தை விரையஞ் செய்தல்.

4. சிவில், கிரிமினல் விவகாரங்களில் பணத்தைப் பாழாக்குதல்.

5. ஆடையாபரணாதிகளிலும், வீடு மாடிகளிலும், ஆயிரமாயிரக் கணக்கான தொகைகளை நஷ்டப்பட்டு வரும்படி முடக்குதல்.

6. "அரசனில்லாப்படை வெட்டாது" என்றபடி நகருக்குள்ளேயே பல வகுப்புகளும் அவ்வவ்வகுப்புகளுக்கு பிரதானியொருவருமேற்படுத்தி அவர்களிட்டதே சட்டமாய்க்கேட்டு நடவாமை.

7. தர்மம் இன்னபடி தெய்வவழிபாடு இன்னபடி யென்று ஆராயாமலே சத்திரம் கட்டுதல் சோம்பேறிக்குச் சோறுபோடல், ஆலயங்கட்டுதல், தேவாராதனைகள்செய்தல். இவ்வகையில் டம்பார்த்தமாகவும் மூடக்கொள்கையாகவும் மிகு பணங்கள் பாழாக்கப்படுகின்றன.

8. ஆணோ பெண்ணோ ஒவ்வொரு நபரும் தன்தன் உதிரகாலக்ஷேபத்திற்கு வேண்டிய அளவுக்குத் தக்கபடியாவது ஒரு சரியான தொழிலை யிளமையிலேயே கற்றுத் தெரிந்து கொள்ளாமல், தாய்தந்தையரையும், அண்ணன் தம்பியையும், புருஷன் மாமன் மாமியையும், தாசிவேசிகளையும் நம்பியிருத்தல்.

9. பால்ய விவாஹமும், கிழ விவாஹமும்.

10. இளமையிலேயே டம்பார்த்தமான பேச்சுகள், கூட்டுறவுகள், நடையுடை பாவனைகள், இவைமுதலியவையாகும்.

இவைகளைக் கவனித்து அகற்றவேண்டியது மஹா அவசியமாகும். இதுவே நம்முடைய முன்னேற்றமாகிய வீட்டுக்கு அஸ்திபாரமும், நமது க்ஷேமகரமாகிய மாடியைத்தாங்கும் தூண்களும், நம்மை நல்லவழிப்படுத்தும் சன்மார்க்கங்களுமாகும்.

16—7—11. "நேல்லைமித்திரன்."

இதுவே தேசாபிமானி செய்யவேண்டியது.

கனத்தங்கிய ஸ்ரீமான் கோபால்கிருஷ்ண கோக்கலே சி. ஐ. இ. என்பவரைப்பற்றி உலகமுழுதும் நன்றாய் அறியும்.

இப்பெருமானின் பெயரைக் கேளாதாரும் இவர் குணஞ் செய லைக்கேளாதாரும் அதிர்ஷ்டஞ்செய்யாதவரே.

ஏனெனின் நல்லாரைக் காண்பதும், அவர் சொற் கேட்பதும், அவர் குணங்களுரைப்பதும், அவரோடு கூடியிருப்பதும் நன்றென்று பெரியோர்கள் மொழிந்துள்ளாராதலினாலும், நன்று எய்தல் அதிர் ஷ்டமிருந்தாற்றான் எய்தும் என்றும் நம்மவர் துணிபாதலினாலுங் கூறினோம்.

இக்கருணையாளரைக் காணவும், இவரோடு உரையாடவும், கூடி யிருக்கவும், குலாவவும், அளவளாவும் பாக்கியம் பெற்றவரே புண்ணி யவான்கள்.

நிற்க, இப்பெருந்தகையாளர் 1866-வது வரு பம்பாய் ராஜதா னியிலுள்ள கோலாப்பூரில் மகாராஸ்டிர வமிசத்தைச் சேர்ந்ததோர் பிராமணகுலத்தில் உதித்தவர். 1884-வது வருஷத்தில் பம்பாயில் உள்ள "எல்பின்ஸ்டன்" என்னும் கலாசாலையிற் சேர்ந்து பி. ஏ. பரி க்ஷைக்குப்படித்துப்பட்டம் பெற்றவர்.

விளையும்பயிர் முளையிலேயே என்றபடி மாணக்கராக இருக்கும் நிலையிலேயே இவருக்கு எல்லா உத்தம குணங்களும் அமைந்திருந் ததுமன்றி கல்வித்தெய்வத்துக்கோர் ஆலயமாக விளங்கினர்.

எல்லாத் தொழிலினும் உபாத்திமைத் தொழிலே பாவமில்லாத தும் புண்ணியம் பயப்பதுங் கண்ணியமுடையதும் உலகுக்கு நன்மை செய்யக்கூடியதும் என்று தெரிந்து உபாத்திமைத்தொழில் செய்ய வேண்டுமென்று உறுதிசெய்துகொண்டார். இருபத்தைந்து வருஷம் ஆசிரியராக இருக்கவேண்டுமென்பது அவர் கொண்ட எண்ணம். அவ்வண்ணமே இருபத்தைந்து வருஷம் ஆசிரியராக இருந்தருளிப் பலமாணவரைப் படிப்பித்து உயர்ந்தகுணஞ் செயலுடையவர்களாய் பொதுநலப்பிரியராய் உயர்ந்தபதவி யடையும்படியாய்ச் செய்திருக் கின்றனர்.

இவர் எங்கு எப்படி ஆசிரியராய் இருந்தார் என்பது கேட்பவர் க்கு மிக்க ஆச்சரியத்தை விளைவிக்கும். இவர்க்கு அரசாங்க சம்பந் தமான உத்தியோகத்திலிருப்பின் ஆயிரக்கணக்காய்ச் சம்பளம் பெற லாமென்றாலும் வலிதில் கிடைக்கும். அவ்வுத்தியோகங்களையும் வே ண்டாமெனத் தள்ளித்தனது ஜனன பூமியாகிய பம்பாய் நகரத்தி லேயே புனவிலுள்ள "பார்க்குஸன்" கலாசாலையில் போதகாசிரிய ராக அமர்ந்திருந்து அநேக மாணவரை உலகில் புனித மனிதர்க ளென்று கொண்டாடும்படிச் செய்து உலகிற்கு நன்மை செய்தனர். இவர் கல்வி வன்மைக்கும் போதனாசக்திக்கும் ஆயிரக்கணக்காக சம் பளம் கிடைக்குமென்றாலும் அதை வேண்டாமென்று மறுத்து தன் னுடைய சாதாரண சாப்பாட்டிற்குப்போதுமான 70 ரூபாய் போது

மென்று சொல்லி அதனை ஏற்று தேயநன்மைக்கு உழைத்து வந்தார். இவரன்றோ பரோபகாரி! இவரன்றோ புருஷர்! இவர் பரமபாகவதராகிய "மகாதேவ கோவிந்தரனடே" யிடமிருந்து அநுக்கிரமும் ஆசீர்வாதமும் பெற்றிருக்கின்றார்.

இந்தியாவின் நன்மையைக் கருதி இங்கிலாந்து சென்று அரசர்கள் மெச்ச அருமைப் பிரசங்கஞ் செய்து நன்கு மதிப்புப்பெற்றவர். அரசாங்கத்தாரால் இந்தியாவிற்குப் பல நன்மை உண்டாகும்படி இனிமையாகப்பேசிப் பயன் செய்திருக்கின்றார். பல வரிகளைக் குறைக்கச்செய்தவரும் இவரே. இப்பெருமான் இப்பொழுது நமது தேசத்திற்கு ஆரம்பக்கல்வி அவசியமென்று கண்டு அரசாங்கத்தாருக்குத் தெரிவித்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றார்.

கல்வி இல்லாமல் அறிவு வளர்தல் அருமை. கல்வியே அறிவு தரும். அறிவு இருந்தால் நல்லது தீயது உணரலாம். நல்லதின் நன்மைகளையும் தீயதின் தீமைகளையும் தெரிந்து தீதை நீக்கி நல்லதைக் கைக்கொண்டு மேன்மை பெறலாம். கல்வி ஒன்றாலேயே ஒரு தேயம் முன்னுக்குவரும், நாகரீகம் பெறும், செழிப்படையும்என்னும் இவைகளை உணர்ந்து நமது இந்தியாவிலும் கல்வி எங்கும் பரவி மக்கள் இன்புற்று வாழவேண்டு மென்னும் பொது நலங்கருதி கனம் தங்கிய கோபாலகிருஷ்ண கோக்கலே என்னும் பெருமான் ஆரம்பக்கல்வி எல்லோர்க்கும் கட்டாயமாக இருத்தல் வேண்டும், அதுவும் பணச்செலவின்றி இலவசமாக இருத்தல் வேண்டுமென்றும் நமது ஆவலை கருணைமிக்க அரசர்கள்பால் எடுத்துக்கூறி வேண்டிக்கொள்ளுகின்றார். அவர் இக்கல்வி சம்பந்தமாகக் கொண்டுவரும் நிபந்தனைகள் (மசோதாக்கள்) கீழ் எழுதுகின்றோம். இத்தகைய கருணை மிக்க பரோபகாரப்பிரபு சுகதேகியாய் நெடுநாள் வாழ்ந்து நமது நாட்டிற்கு நன்மைகள் செய்துகொண்டிருக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மூலாதாரக் கல்வியைப் பற்றின

* மசோதா.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் இந்தியாவிற்கு ஆரம்பக்கல்வி இப்பொழுது வேண்டுவது அவசியமென்றுணர்ந்து இராஜப்பிரதிநிதி

* இங்கு தமிழ்ப்பதங்களை உபயோகிக்காமல் ஆரியம் ஆங்கிலம், உருதுக்கு முதலிய பாஷை மொழிகளை உபயோகித்துள்ளது எல்லோருக்கும் பொருள் தெரியவேண்டியே. செந்தமிழ்ப் பத்திரிகையில் பிறபாஷை மொழிகள் வரலாமோ என்று நினைந்து கொள்வோரை மன்னிக்கவேண்டுகின்றோம். இது யாவரும் தெரிந்துகொள்ளவேண்டுவது முக்கியமானதால் எல்லோருக்கும் தெரிந்து வழங்கும் அச்சொல்லை உபயோகப்படுத்தினோம்.

யின் சட்ட நிருபண சபையில் இதன் சம்பந்தமாய் ஒரு **மசோதா** கொண்டுவந்திருக்கிறார். அதில் முக்கியமான 12 அம்சங்கள் அமைந்திருக்கின்றன. இதன் கருத்து ஆரம்பப்படிப்பை (பிரைமரி படிப்பை) தேசமெங்கும் பரவச்செய்யவேண்டு மென்பதுதான்.

அவர் கொண்டுவந்த முக்கியமான 12 அம்சங்கள்:—

1. இந்த மசோதா அநுமதியை மாத்திரம் கொடுக்கிறது:—பலவந்தப்படுத்தி ஆரம்பப்படிப்பு சொல்லிவைக்கவேண்டிய இடங்களைக் குறிப்பிட லோகல் சங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது, ஆனால் அப்படிக் குறிப்பிடுவது அவர்கள் இஷ்டம்.

2. முதலில் பிள்ளைகளுக்குமாத்திரமே:—ஆரம்பத்தில்பையன்களுக்குமாத்திரம் கட்டாய ரூலைப்பிரயோகிக்கலாம். பிறகு வேண்டியபோது பெண்கல்வி விஷயத்திலும் இந்த ரூலை அமுலுக்குக்கொண்டுவரலாம்.

3. ஏழைகளுக்குச் சம்பளமில்லை:—சம்பளம் கொடுக்கமுடியாமல் அதிக ஏழையாயிருப்பவர்கள் சம்பளமே கொடுக்கவேண்டாம்.

4. போலீசாருக்கு இதில் சம்பந்தமில்லை:—பிள்ளைகள் சரிவர பாடசாலைக்கு வரச்செய்ய ஒரு ஸ்பெஷல் ஸ்கூல் கமிட்டி ஏற்படவேண்டும். கட்டாய விஷயத்தைப்பற்றிய ரூல்கள் போலீசாரினால் பிரயோகிக்கப்படமாட்டா. இதற்காகவே ஸ்பெஷல் கமிட்டிகள் ஏற்படுத்தப்படும்.

5. தண்டனைகள் இலேசானவை:— போதுமான எச்சரிக்கைக்குப்பிறகு தாய் அல்லது தந்தைக்கு முதல்தடவை இரண்டு ரூபாய் அபராதம் போடலாம். பிறகு ஒவ்வொரு தவறுதலுக்கும் பத்து ரூபாய்வரை போடலாம்.

6. மதசம்பந்தமான ஆக்ஷேபனைகள் அங்கீகரிக்கப்படும்:—ஒரே பள்ளிக்கூடமிருந்து அங்கு சொல்லிவைக்கிற மதத்துக்கு ஆட்சேபனையிருக்கும் பட்சத்தில் அங்கு பிள்ளைகளை அனுப்பவேண்டாம்.

7. பாடசாலைக்கு வராததற்குக் கீழ்க்கண்டுள்ள காரணங்கள் மன்னிக்கத்தக்கதாகும்:—

(1.) வீட்டுக்காரியம் (2) பிள்ளைக்கு வியாதி (3) பருவசம்பந்தமான விவசாயவேலை (4) ஒருமைல் தூரதநுக்குள் பாடசாலை யில்லாமை (5) வீட்டில் குழந்தைக்குச் சரிவரபடிப்பு சொல்லிவைத்தல். (6) அல்லது வேறு நியாயமான காரணங்கள்.

8. குழந்தைகளை வேலையில் அமர்த்திக் கொள்ளக்கூடாது:—பள்ளிக்கூடத்திலிருக்கவேண்டிய குழந்தைகளை வேலையில் வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி அமர்த்தினால் தண்டனை விதிக்கப்படும்.

9. நாலே வருஷங்கள்:—6-வயதுக்கு மேற்பட்டு 10-வயதுக் குட்பட்ட குழந்தைகளைத்தான் பாடசாலைக்கு வரச்சொல்லுவது. பரோடா, இலங்கை இன்னும் மற்ற தேசங்களில் கட்டாயப்படிப் பின் காலம் 6 வருஷத்துக்குக் குறையில்லை.

10. பாடசாலைகளின் குணம்:—கல்வி டிபார்ட்டு மெண்டார் பாடசாலைகளை ஆமோதிக்கவேண்டியதுந்தவிர, பாடசாலைக்குவேண் டிய கட்டிடம் கட்டும் மாதிரியையும் குறிப்பிடுவார்கள்.

11. கவர்ன்மெண்டார் மேல்பார்வை:— கவர்னர் ஜனரலும் அவர் சபையோரும் சட்டங்களைச்செய்வார்கள். ராஜதானி கவர்ன் மெண்டார் கட்டாயப்படிப்பு ஏற்படுத்தவேண்டிய பிரதேசங்களைக் குறிப்பிடுவதையும், ஷை ரூல்களையும் வித்யாவரி விதிப்பவரையும் சாங்ஷன் செய்யவேண்டும்.

12. செலவு:—கவர்ன்மெண்டாருக்கும் லோக்கல் சங்கத்தா ருக்கும் சம்பந்தமானது. அதிகச்செலவைப் பொறுப்பதற்கே லோக் கல் சங்கத்தார் வித்யாவரி விதிக்கலாம்.

கல்விப்பிரியன்.

விநோதக் கூற்று.

பெண்பாடசாலை உபாத்தியாயர்:—"குழந்தாய்! இந்தக் கணக்கில் ரூபா சலத்தில் பிழை இருக்கிறது. கவனித்துப் பார்"

சிறுமி:— 'ஆகட்டும் ஐயா"என்று சொல்லித் திருத்திக்கொண்டு போய் மறுபடியும் காட்டினாள்.

உபாத்தியாயர்:—"குழந்தாய்! இன்னும்நன்றாய்ப்பார், ரூபா கலம் சரி. அணாக்கலத்தில் தப்பு விட்டாய்"

சிறுமி:--"ஆகட்டும் ஐயா" என்று சொல்லித் திரும்பவும்பார்த்து திருத் திக்கொண்டு போய்க் காட்டினாள்.

உபாத்தியாயர்:— "குழந்தாய் நன்றாய் நீ கவனிக்கவில்லை பைசா கலத் தில் பிழையிருக்கிறது" என்றார்.

சிறுமி:— (சலிப்புடன்) "ஐயா எவ்வளவு குறைகிறது?" என்றாள்.

உபாத்தியாயர்:—"கணக்கு போடுதலில் சலிப்பு இருக்கக்கூடாது. ஒரு பைசா குறைகிறது" என்றார்.

சிறுமி:—"மிகவும் நல்லது" "நல்லவேளை அம்மாள் பொறி கடலை வாங் கித் தின்னக் கொடுத்த ஒரு பைசா ஜேப்பிலிருக்கிறது" என்று சொல்லி எடுத்துக்கொடுத்துவிட்டு மிகச் சந்தோஷத்துடன் தன்னிடஞ் சென்றாள்.

(உபாத்தியாயரும் மற்றையரும் நகைத்தார்கள்.)

உலகப்பிரசித்திபெற்ற பண்டித ராமபாய்.

இவ்வம்மை மைசூர் தேயத்தில் அநேக தலைமுறையாக வசித்து வந்த கோகனுஸ்த பிராமண குடும்பத்தில் உதித்தவள். மங்களூர் தேயத்து அனந்த சாஸ்திரி இவ்வம்மையின் தகப்பன், இவர் பாலியத்திலேயே இத்தேசத்து திவ்விய பாஷையாகிய சமஸ்கிருதத்தை கற்க அதிக அவாக்கொண்டிருக்குங்காலத்து இவருக்கு ஒரு இளம் பெண்ணை பெற்றோர்கள் விவாகம் செய்து வைத்துக் குடும்பவிஷயங்களைக் கவனித்துவரச்செய்தார்கள். ஆதலால் கல்வியின்மீது வைத்திருந்த அவாவை அக்காலத்தில் பூர்த்தி செய்யக்கூடாமல் போய்விட்டது. ஆயினும் சிலகாலம் கழிந்தபின் புனா தேயத்துக் கீர்த்திபெற்ற பண்டிதராமசந்திர சாஸ்திரியாரைப்பற்றிக் கேள்விப்பட்ட இவர் அவ்விடம் சென்று சிலகாலமிருந்து கல்வி கற்றுத் தேர்ச்சி யடைந்த பின்னர் தன்னால் கூடியமட்டும் தன் மனைவிக்குக் கல்வி புகட்ட வேண்டுமெனத் தீர்மானித்து தந்நாடடைந்தனர்.

(இவருக்கு அப்பொழுது வயது 23.) மனைவிக்கு கல்வி புகட்ட எத்தனித்தவளவில் பெற்றோர்கள் மறுத்தனர். தன் னெண்ணம் நிறைவேறாததைக் கண்டு துக்கித்துக் கொண்டிருக்குங் காலங்களில் தன் மனைவி மண்ணுலகைவிட்டு விண்ணுலகமேவினாள். அக்காலத்தில் அவர் தாரமிழந்து தன் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கொரு அனுகூலமாயிருந்தது. கொஞ்சகாலத்திற்குப் பிறகு 9 வயதுள்ள லட்சுமிபாய் இவருக்கு மனைவியானாள். இப்பெண்ணுக்கும் கல்வி புகட்ட ஆரம்பித்தவளவில் முன்போல் தன் பெற்றோர்கள் தடை செய்தார்களாயினும், தன் மனைவி தன் சொல்படி நடப்பாளென்றும், கல்வி கற்க அதிக அவாக்கொண்டிருக்கிறா ளென்பதையும் அறிந்த இவர் தன் மனைவியுடன் தனிமையாகக் காட்டில்போய் குடி இருக்கத்தீர்மானித்துக்கொண்டனர்.

இவ்வாறு தீர்மானம் செய்த சில தினங்களுக்குள் ஒரு நாள் சாயந்திரம் தன் மனைவியுடன் மேற்குமலைத் தொடரிலுள்ள (Gungamul) கங்கமல் என்னும் காட்டை நாடிச்சென்று பொழுது சாய்ந்தவுடன் ஒருமரத்தடியில் போய்த்தங்கினார்கள், அங்கு சமீபத்தில் ஒரு பெரும் புலி கத்திக்கொண்டிருந்ததைப் பார்த்த லட்சுமிபாய் திகிலடைந்து நடுநடுங்கி அணிகளைத்தன்மீது சுற்றிக்கொண்டு மரத்தடியில் படுத்துக் கொண்டாள். அநந்தசாஸ்திரி, இமை கொட்டாது மறுநாள் காலை வரையிலும் விழித்திருந்து, விடிந்த உடன் அவ்விடமிருந்த, ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானத்தைநோக்கிச்சென்று அவ்விடத்தில் காட்டில் கிடைக்கக்கூடிய மரமட்டைகளால் ஒரு குடிசை ஒன்று கட்டி அதில் வசித்து வந்தார்கள். சாஸ்திரி பக்கத்திலுள்ள பட்டணங்களுக்கும்

கிராமங்களுக்கும் அடிக்கடி போய்க்கொண்டிருப்பார். இங்கு யா தொரு இடையூறுகளின்றித் தன் மனைவிக்குக் கல்வி போதித்து வந் தனர். இவ்வாறு சிலவருடங்கள் வசித்து வருகையில் லட்சுமிபாயிக்கு ஒரு ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. பண்டிதராமபாய் மூன்றாவதுபிள்ளை, சாஸ்திரி சம்ஸ்கிருதத்தில் பண் டிதராகையால் அநேக பிராமணப்பிள்ளைகள் அவர் இருப்பிடம் கான கமாய் இருப்பினும் அவ்விடம் நோக்கிச்சென்று கல்வி கற்றுவந்தனர். ராமபாய் 1858 வருடத்தில் பிறந்தாள். அநந்தசாஸ்திரியும் லட்சு மிபாயும் தங்கள் குழந்தைகளுக்கு தங்களால் கூடியமட்டும் கல்வி கற் றுக்கொடுத்தார்கள். மூன்று குழந்தைகளில் ராமபாய் அதிக சுறு சுறுப்பாய்க் கல்வி கற்றுவந்தாள். இவ்வாறு காலங்கழித்து வருகை யில் சாஸ்திரி தன் மூத்த குமாரத்தியை ஒரு பிராமண சிறுவனுக்கு விவாகம் செய்துகொடுத்தார். அப்பெண் விவாகமான இரண்டு வரு டங்களுக்குள் உயிர் துறந்தனள். பின்பு சாஸ்திரி தன் மனைவி மக்க ளுடன் ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் போவதாகத் தீர் மானித்து தேசங்கள் தோறும் யாத்திரை செய்து வருகையில் சாஸ் திரியும் சாஸ்திரியின் பாரியாளும். காலசாவென்னும் கொடிய நோயி னால் தங்கள் இருபிள்ளைகளை அந்தரத்தில் விட்டுவிட்டுக் காலஞ்சென் றனர். இவ்விரண்டு பிள்ளைகளும் ஊர் ஊர் சென்று ஜீவித்துவந்தார் கள். ராமபாயின் சகோதரன் யாதொரு வேலை செய்வதற்கும் சக்தி யற்றவனாக இருந்தான். ஆயினும் ராமபாய் மத விஷயங்களடங்கிய கிரந்த சுலோகங்களை ஹிந்து பாஷையில் பிரசங்கம் செய்ய வாரம்பித் தாள். ஜனங்கள் அவளின் பிரசங்கத்தை அதியாவலுடன் கேட்டா னந்தித்துப்பொருள் உதவி செய்து வந்தார்கள்.

இவர்கள் இவ்விதம் ஊர் ஊர் சென்று ஜீவித்து வருகையில் இராமபாயின் சகோதரனும் இறந்துபோய்விட்டான். கடைசியாக இப்பெண் யாதொரு துணையுமின்றி ஜலத்தைவிட்டு நீங்கிய தாமரை போலவும் நிலத்தைவிட்டு நீங்கிய பயிர் போலவும் வாடி பார்த்தோர் பரிதவிக்கும்படியான நிலைமையில் கல்கத்தா நகரம்போய்ச்சேர்ந்தாள். அவ்விடத்தில் வழக்கம்போல் பிரசங்கம் செய்ய ஊரெல்லாம், ராம பாய், ராமபாய் என்ற வார்த்தையாகவே இருந்தது. அந்நகரத்தின் பண்டிதர்கள் ராமபாயின் கல்விவன்மை, சொல்வன்மை, மனோதைரி ரியம் இவைகளைப்பார்த்து அதிசயித்து சரஸ்வதியெனப் பெயர் வைத் தார்கள். ஒவ்வொரு பத்திரிகையும் இம்மாதைப்பற்றி புகழ்ந்து பேசி சரஸ்வதி ராமபாய் சரஸ்வதி ராமபாய் எனக் கொண்டாடின. உலகமுழுவதும் இவள் புகழே பரவிற்று. பிரசித்திப்பெற்ற இப் பெண்ணை கல்கத்தா ஐகோர்ட்டு வக்கீலாகிய (Bipin Bibari Madhavi, M. A., B. L.,) பீபின் பிகாரி மாதாவை எம். ஏ. பி. எல்., 1881-வருடத்தில் மணம் புரிந்துகொண்டார். அப்பொழுது இவளுக்கு 23 வயது.) இவ்விருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்கு

மூன்றத்துக்கு (Manorama) மனோரமா எனப்பெயர் வைத்தார்கள். இவ் விருவருக்கும் விவாகமான 19 பத்தொன்பதாவது மாதத்தில் பின் பிகாரி மாதாவை காலஞ்சென்றனர். ஐயோ! என்ன பரிதாபமான நிலைமை!! ராமாபாயின் மனது அத்தருணத்தில் என்னிலைமையில் இருந்திருக்கவேண்டுமென நீங்களே யோசியுங்கள்.

நிற்க, லட்சுமிபாய் காட்டில் தன் நாயகனுடன் வசித்து வருகையில் சிலர், காட்டில் ஏன் உன் நாயகனுடன் கஷ்டப்படவேண்டும்? ஏன் உன் தாய் வீடு போய்ச் சேரக்கூடாது? எனக்கேட்டதற்கு லட்சுமிபாய் அவர்களுக்கு, "கணவனே எனக்குகதி, கணவனே எனக்கு நிதி, பர்த்தாவுடன்கூடி வாழ்வதே எனக்கு பரமானந்தம், பர்த்தா இருக்கும் இடம்காடாயிருந்தாலும் அது எனக்கு ராஜதானிக்குச் சமானம், பட்டணமாயிருந்தாலும் பர்த்தா இல்லாத இடமே பாழ், எனக்கு என்ன துன்பம் வந்தாலும் கணவனுடைய கிருபாநோக்கம் பட்டால் என்னுடைய கஷ்டமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும், எனக்குஎவ்வளவு பாக்கியமிருந்தாலும் கணவனுடைய கிருபைமட்டும் நீங்கினால் ஜலத்தைவிட்டு நீங்கிய மீன்போல் உயிர் விடுவேன், கணவனுடைய மனமும் என்மனமும் ஒன்று, கணவனுக்குஎதில் வெறுப்போ அதில் எனக்கும் வெறுப்பு, கணவன் புசித்தால் எனக்கு பசி தீரும், கணவன் சந்தோஷித்தால் எனக்கு சந்தோஷமுண்டாகும். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன், கூலானாலும் மணவாளன். எப்பொழுது நான் விவாகம் செய்துகொண்டேனோ அன்று முதல்நான் அவருக்கு அடிமை. என் நாயகன் ஏழையானதால் அவருடைய ஊழியங்கள் யாவும் என்னுடைய கையால்செய்யும்படியான அதிர்ஷ்டமும் எனக்குக்கிடைத்தது. என்னுடைய புருஷரே எனக்கு அரசர். அந்த அரசருக்கு நானே குடி, அவருடைய அன்பே எனக்குச் செல்வம் என்னுடைய கற்பே அவருக்கு நான் கொடுக்கும்கடமை, அவர் இறப்பின் நானும் இறந்துவிடுவேன் என்று கூறினளாம்."

இதை, நமது பெண்மக்கள் கவனித்து அவ்வாறு நடப்பார்களாக.

(தொடரும்.)

J. S. நரசிம்மலு.

நமது நாட்டுப் பெண்மணிகளின் தற்கால நிலைமை

(70-ம் பக்கத் தொடர்ச்சி.)

இக்காலத்தில் பெண்பாலர்க்கு எல்லாச் சுவாதீனங்களுங் கிடைத்திருக்கின்றன. கல்வி கற்கவும், அறிவைப் பெறவும் ஏற்ற காலமாக

இருக்கிறது. அரசாங்கத்தார் நம்மிடத்துப் பலவகையாலுங்கருணை காட்டுகின்றனர்.

இக்காலத்தில் சிலமாதர்கள் ஆடவர்களைப் போலப் பெரும் பட்டங்களும் உத்தியோகங்களும் பெற்று ஆடவர்களுக்குச் சமத்துவத்தை யடைந்திருக்கின்றார்கள். சிலமாதர்கள் பத்திராதிபர்களாக வுமிருந்து பத்திரிகைகளையும் நடத்துகின்றார்கள். இன்னும் சிலமாதர்கள் தேயநன்மை கருதி ஆடவர்களிலும் ஆயிரமடங்கு முயற்சி எடுத்து வேலைசெய்து வருகின்றார்கள். ஆனால் பெரும்பாலார் ஐயோ பாவம்! மிருகப்பிராயர்களாகவே இருக்கின்றார்கள். நற்குணம், நற்செயல், நல்லொழுக்கம், தெய்வபக்தி, நாகரீகம், அன்பு, கருணை, தயை, தாட்சண்யம் முதலியவற்றின் வாசனை, சிறிதும் இன்றி மிருகங்களிலுங் கேடாயிருக்கின்றனர்.

மாதர்கள்பரிட்சைகளிற் றேர்ச்சிபெற்று பட்டங்கள்பெறவேண்டுமென்பதாவது, ஆண்பிள்ளைகள்போல் உத்தியோகஞ்செய்யவேண்டுமென்பதாவது, ஆண்பிள்ளைகளுக்குச் சமதையாக இருக்கவேண்டுமென்பதாவது, கண்டோர்நகைக்க நாணத்தைத்துறந்து ஆடவர்கள் தோள்மேல் கைபோட்டுக் கொண்டு உலாவவேண்டு மென்பதாவது, "பீட்டன்" வண்டியில் செல்லவேண்டு மென்பதாவது எனது கருத்தல்ல.

இந்தக் காலத்தும் நமது நாட்டுச் சகோதரிகளில் எத்தனையோ கோடிப்பெயர் கல்விகற்காது அறிவு நிறம்பப்பெறாாய் உண்டுறங்கி

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்."

(இதன்பொருள்:-கற்றவர் மக்களையும், கல்லாதவர் மிருகங்களையும் ஒப்பர் என்பதாம்)

என்னும் பொய்யாமொழிக்குப் பொருளாய்ப் புலம்பித்தவித்து ஒருபயனுமின்றிக் காலத்தைக் கொன்னே கழித்துக் கொண்டிருக்கின்றனரே என்னுந் துக்கமே துயர்செய்தலால் இவ்வியாசம்எழுதப் புகுந்தேன்.

இன்னுஞ் சிலமாதரோ மேலைநாட்டு மாதர்போல் உடை உடுத்தலைமட்டும் விரும்புகின்றனர். சிலர் மேலைநாட்டு நடையை விரும்புகின்றனர்.

சிலர் மேலைநாட்டாரின் உடைநடை யிரண்டையும் விரும்புகின்றனர். சிலர் மேலைநாட்டாருக்கும் தமக்கும் பேதமில்லாமலே காணப்படுகின்றனர். ஆனாற் பலரோ எதுவுமின்றி மண்ணாங்கட்டி போல் இடைப்பட்ட காலத்தி இருந்தது போலவே இருக்கின்றனர். இப்பொழுது நம்நாட்டுப்பெண்களில் ஆயிரத்துக்குப் பத்துப்பேரேனும் படித்தவர் கிடைப்பது அரிதாயிருக்கிறது.

ஆனால் மிகச்சிலரே நம் நாட்டிற்கும் குலத்திற்கும் ஏற்றவாறு நின்று, கற்று, அறிவை விளக்கிக்கொண்டு, இல்லறத்தில் தம் நாயகரோடு இருந்து வேண்டுவன இயற்றி நாயகனை மகிழ்வித்துப் பண்புடைமக்களைப் பெற்று அவர்களைப் போற்றி வளர்க்க வேண்டிய விதமாய் வளர்த்து அம்மக்களுக்குத் தக்க கல்வி அறிவையூட்டி, நல்வழியைக்காட்டி நடத்தி, தம்மக்கள் தம்மைச் சேர்ந்தாரோடுஞ் சுகமே வாழ்ந்திருந்து, நாட்டிற்கு நன்மைசெய்து பெரும்புகழ் பெறும்படிச் செய்கின்றனர்.

ஆதலாற் சகோதரிகளே! நம் நாட்டுப்பெண்பாலாரனைவரும் கற்கவேண்டியவைகளைக் கற்றுத் தம் நாயகனுக்குப் பெருந்துணையாயிருந்து, புத்திரர்களை ஒழுங்காக வளர்த்து அவர்களை நல்லொழுக்கத்தில் நடத்தி, நல்லறிவையும் புகட்டினாலொழிய நமது நாடு முன்னுக்கு வருதலருமை. இனி இந்த என் வியாசத்தின் கருத்தென்னையோ? என்றால், தற்காலம் பெண்பாலார் மேன்மை யடைதற்கான சாதனங்கள் மிக இருக்கின்றன. அச்சாதனங்களில் முக்கியமானவை கல்வியறிவு தேகபலம் முதலிய வற்றைச்சிரமமின்றி எளிதிற் பெறலாம்.

நமது நாட்டுப்பெண்மணிகள் கல்வி பெறுவாரானால் மற்றெல்லா நன்மைகளையும் மிக எளிதில் பெறக்கூடும்.

* கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்—கல்வியே
செல்வப் பொருளின்பஞ் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு.

கல்வியறிவுதருங் கற்பை நிலைநிறுத்தும்
இல்வாழ்வுக்கேற்ற இசைவெல்லாம் சொல்விக்கும்
இந்நிலத்து மேன்மையெல்லா மெய்துவிக்கும் முத்தியெனும்
அந்நிலத்துக் குற்றதுணை யாம்.

(பெண்மை நெறி விளக்கம்.)

(இவற்றின் திரண்ட பொருள்:—கல்வி, நல்ல உயிரைக் காப்பதற்கும், நல்ல உடம்பைக் காப்பாற்றுதற்கும், செல்வஞ் சேர்ப்பதற்கும், இன்பத்தை அடைதற்கும் முக்கிய துணையாகும். கல்வி அறிவுதரும், கற்பை நிலைநிறுத்தும், இல்வாழ்வுக்கேற்ற உதவியெல்லாம் செய்யும். இந்த உலகத்து மேன்மையெல்லாம் உண்டாக்கும். முக்திக்கும் இதுவேஉற்றதுணையாகும், என்பதாம்.)

என்றதனாற் கல்வியின் சிறப்பு நன்றாய்ப் புலப்படுகிறது. ஆதலால் நமது நாட்டுப் பெண்மணிகள் கல்வியைக் கற்று தமது வயிற்றிற் பிறந்த புத்திரர்களைக் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்தவர்களா

* இவை இரண்டும் "பெண்மை நெறி விளக்கத்தில்" பேதை யியலில் (கூ-ம்) அதிகாரம், "கல்வி" என்பதிற் காணலாம். இப்"பெண்மை நெறி விளக்கம்" திரிசிரபுரம் "அமிர்தகவி அமிர்தம்பிள்ளை அவர்களால்" இயற்றப்பெற்றது.

கும்படி செம்மையாக வளர்த்து அவர்களால் நமது தேயஞ்சிறக்கும்படிச் செய்து புகழ்பெற வேண்டுமென்பதே நமது பரதநாடாகிய அன்னை நமதுநாட்டுப் பெண்மணிகள் பால் விரும்பி வேண்டுவது.

இதை நமது நாட்டுச் சகோதரிகள் கவனித்து நமது பாரத மாதாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வாராக.

திரிசிரபுரம்.
10—8—11.

அ. சுப்பம்மாள்.

புத்தகவரவுகள்.

* சாமகவிகள்:— இது குரு நாக்கல் டிஸ்டிரிக்டு இஞ்சினியர் மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்கள் தாயார் ஸ்ரீமத் தங்கச்சிப்பிள்ளை அம்மாளின் சாயுச்சியத்தைப் பற்றி மதுரைச்சங்கத்து வித்துவான்களும் யாழ்ப்பாணத்து வித்வான்களும் பாடிய செய்யுட்டொகையையுடைய புத்தகம். இதில் வேளாளர் சிறப்பும் கற்பின் சிறப்பும் சிவபெருமானின் திருவருளின் மேம்பாடும், சைவசமயச் சிறப்பும் பாராட்டிக் கூறப்பெற்றிருக்கிறது. தமிழினிமையும் செய்யுள் நயமும் படிப்பவர் கொண்டாடிக் குதூகலிக்கத் தக்கது.

இதனைப் பூர்வ சரிதச் சுருக்கத்துடன் அச்சிட்டு வெளிப்படுத்தி உலகிற்குப் பயன் செய்வித்தவர் மதுரை வாசியாகிய நமது நண்பர் மகா-ள-ள-ஸ்ரீ ச. ஆறுமுகம்பிள்ளை அவர்களே. இவர்களின் உபகார சீலம் மெய்யறிவினர் விரும்பத்தக்கதே.

"அஞ்ஞாதவாஸம்" அல்லது, மாண்டவன் மீண்டமாயம்,:—இப்பெயர் புனைந்த புத்தகமொன்று மதுரை "வித்யாபாநு"ப் பத்திராதிபர்களில் ஒருவராகிய மகா-ள-ள-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களால் கிடைக்கப்பெற்றோம். இது ஒரு அருமையான துப்பறியுந் தமிழ் "நாவல்" இதன் தமிழ் நடை மிக இனிமையாகவுஞ் செம்மையாகவும் எழுதப்பெற்றிருக்கின்றது. இது, படிப்பதற்கு மிக ஆவல்தரக் கூடிய நாவல். இதுபோலும் தமிழ் நாவல்கள் நமது நாட்டு மக்களுக்கு அவசியமுடையதே. இதனை இயற்றிய ஆசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ K. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A., B. L. இவர்கள் எடுத்துக்கொண்ட

---

* இது சென்ற மாதத்தே புத்தகவரவு என்னுந் தலைப்பில் 93-வது பக்கத்தில் வந்திருக்கின்றது. அதில் அச்சுக் கோப்பவர்கள் " மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்கள் தயார்" என்னும் பதங்களை விட்டுவிட்டார்கள். பிழை பார்ப்பவர்களும் கவனிக்காதிருந்திட்டார்கள். இப்பிழை பெரும் பிழையே. தயை செய்து மன்னிக்கப் பெரிதும் வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

பிரயாசை மிகவும் கற்றோரால் விரும்பத்தக்கதே. இதுபோலும் பல அருமைப் புத்தகங்களை வெளிப்படுத்தித் தமிழ் நாட்டைப்பெருமைப் படுத்தி இவர் இனிது வாழ்ந்திருக்குமாறு எல்லாம் வல்லகடவுளை ஏத்தித்துதிக்கின்றோம். இப்புத்தகத்தின் விலை அணு 8.

" ஸாவித்திரி சரித்திரம் " 'பதிவ்ரதாமாஹாத்மயம்' இப்பெயர் கொண்ட புத்தகமொன்றை இதன் ஆக்கியோராற் பெற்றோம். இது எவர்க்கும் தெளிவாகப் பொருள் தெரிந்து கொள்ளுமாறு எழுதப் பெற்றிருக்கிறது. வடமொழிச் சொற்கள் அதிகங் கலந்திருக்கிற தென்றாலும் அம்மொழிகளைத் தென்மொழி பயில்வோருந் தெரிந்திருக்கவேண்டுவதும் அவசியமே.

இது கல்விகற்கும் கலாசாலை மாணவர்களுக்கு மிக மிக ஏற்றதே. இது மகாபாரதத்திலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது. இதனை இயற்றியவர் எமது திரிசிரபுரத்து எஸ். பி. ஜி. கலாசாலையின் சரித்திரபோதகாசிரியராகிய ஸ்ரீ மாந், ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ. இவர் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்றிலும் அதி நிபுணரென உலகம் புகழும் பெருமைபெற்ற புலவர். இவர், நூல் இனிமை பயக்கும் தன்மையுடையதாயிருத்தற்கும் ஐய முண்டோ?

இவர், இன்னும் இதுபோலப் பலப்பல நூற்களை வெளிப்படுத்தி நம்மவர்க்கு உதவிசெய்யத் திருவருள் கூட்டற்குத் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றோம்.

"பரத்தையர் கேண்மை விலக்கு" இப்பேர்கொண்ட புத்தகமொன்று இதன் ஆசிரியர் அனுப்பப்பெற்று கண்டு மகிழ் நனி கொண்டோம். காரிகையார் மயலிற் கட்டுண்டு தட்டுக் கெட்டலையும் காளையர்களுக்கு இப்புத்தகம் நல்லறிவை மூட்டுந்தன்மையது. இது எவரும் படிக்கத் தகுந்த இனிய புத்தகம். மேற் கோள்கள் பல பழம் புத்தகங்களிலிருந்து ஆராய்ச்சி செய்து எடுக்கப்பெற்றிருக்கிறது. இனிய செந்தமிழ்ச் சொற்களால் நனிமிகச் சிறந்த கருத்துகளோடு அமைந்த வாக்கியங்களே புத்தக முழுமையுங் காண்கின்றோம்.

இதனை இயற்றிய ஆசிரியர் கோயமுத்தூர் சாரதா விலாச சபையின் காரியதரிசியாகிய மகா-ள-ள-ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள். இவர்கள் தமிழிற் பல அருமையான நூற்களை எழுதித் தமிழ் நாட்டிற்கு உதவி புரிந்திருக்கின்றார்களென்று தெரிகின்றது. இவர் முயற்சி குறைவின்றி மேன்மேலும் நடந்தேறுமாறு அமலன் அருள்செய்ய அவ்வமலனின் பாதபங்கயங்களைப் பணிந்து வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

சமாசாரக்குறிப்புகள்.

தீக்குச்சிகளின் செலவு: உலகம் முழுமையிலும் 24-மணி நேரத்திற்குள் 3000,000 தீக்குச்சிகள் எரிக்கப்படுகின்றனவாம்.

எலித்தோல் உபயோகப்படுவது:—லண்டனில் வருஷந்தோறும் ஐம்பதுனுயிரம்பவுன் வரையில் எலித்தோல் வியாபாரம் நடக்கின்றதாம். எலியின் தோலால் படங்களுக்குச் சட்டஞ்செய்கிறார்களாம். இது தவிர புத்தகங்கள் பைண்டு செய்யவும் எலித்தோல் உபயோகமாகிறது நம்மவர்களும் இவ்விஷயத்தைப்பற்றி யோசனை செய்வது பிரயோஜனமாகும்

உபயோகமாயிருத்தல்:—காலஞ்சென்ற நமது **எட்வர்டுசக்கிரவர்த்திக்கு** மேஜோடு பின்னத்தெரியுமாம். அவர் முதற் குமாரராகிய காலஞ்சென்ற **யார்க் கோமகனுர்க்கு** வடந்திரித்தல் தெரியுமாம். ருஷிய சக்கிரவர்த்தியாகிய **இரண்டாவது நிக்கோலாசுக்கு** ஏருழவும், நடவும், அறுக்கவுந் தெரியுமாம். **ஜெர்மனிய சக்கிரவர்த்திக்கு** நன்ருய் அச்சுக்கோக்கத் தெரியுமாம். இத்தாலிய தேசத்து அரசனுகிய காலஞ்சென்ற **ஹம்பர்ட்** நன்ருய் ஜோடு தைப்பாராம். ஸ்வீடன் அரசனுகிய **ஆஸ்கார்** வெகு நேர்த்தியாக, காலஞ்சென்ற, இங்கிலாந்து தேசத்து பிரதம மந்திரியாகிய **கிளாட்ஸ்டன் துரைபோல் மரம்** வெட்டுவாராம். நமது காலஞ்சென்ற **விக்டோரியா சக்கிரவர்த்தினியாருக்கு** பின்னுந்தொழில் மிக விருப்பமாம். நமது சக்கிரவர்த்தியாகிய ஜார்ஜ்மன்னர் கப்பல் ஓட்டுவதில் மிக வல்லவராம். தொழிலின் அருமை இவர்களன்றே நன்ருயறிந்தவர்கள். நம் இந்தியர்களுக்கு எப்பொழுது கைத்தொழில் அவசியமென்று தோன்றுமோ? எப்பொழுது கைத்தொழிலைக் கைக்கொள்வரோ அறியேம்.

ஹங்கரிதேசத்தில் பூமி யதிர்ச்சி:—ஹங்கரி தேசமுழுவதும் 8௳ 12 நிமிஷம் பூமி யதிர்ந்ததாயும், **புடாபெஸ்த்:**— பட்டணத்து பயந்து தெருக்களில் ஓடினுர்களாம். கெஷ்கிமெட்டில் அநேக வீடுகள் இடிந்து விழுந்தனவாம். நகரமாளிகையும் போர்வீரர் உறை விடமும், நிர்ப்பாக்கிய அந்தஸ்திலிருக்கின்றனவாம்.

இந்தியாவிற்குச் சக்கிரவர்த்தியாரின் வருகை:—

நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தியாரும், நமது மேரி சக்ரவர்த்தினியாரும் நவம்பர்மாதம் 9௳ இங்கிலாந்தைவிட்டு இந்தியாவிற்குப் புறப்படுவார்களெனவும், ஜனவரிமாதம் 28௳ இங்கிலாந்துக்குப் போகப் புறப்படுவார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார்வண்டியின் வேகம்:—இத்தாலியாவிலுள்ள **போடின்** என்பவர் அரை நிமிஷத்தில் ஒரு மயில் தூரத்தை மோடார் வண்டியிலேறிக் கடந்தனராம்,

A VALUABLE ASSET FOR VACANCY SEEKERS.

THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

Sanjeevi Row's lane [Near Little Market]

TRICHINOPOLY.

Superior place for learning. Experts employed on our staff.

Perfect order and discipline maintained.

Imparts instructions in:—

Type-writing	Book-keeping and
Shorthand	Commercial correspondence.

STUDENTS ARE COACHED UP FOR THE GOVERNMENT AND LONDON EXAMINATIONS.

BY

SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

Fees:—Moderate payable by Instalments.

Free admission will be allowed in the case of students who cannot afford to pay their school fees.

Games:—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examination with distinction.

Business hours:—

Shorthand and Book-keeping.	6-30 to 8-30 A. M.
Type-writing class.	Through out the day.

Mechanism on Yost and Remington a Speciality.	Pitman's Journal and Library open to all Students.	Jobworks undertaken. Execution neat.

For further particulars apply to:—

Mr. V. N. Barathy.
Manager.

புத்தகங்கள் புதிதாக அச்சிடும் நூலாசிரியர்களுக்கு

ஐயன்மீர்! நீங்கள் அச்சிடும் புத்தகங்களை எங்கள் ஆபீசுக்கு **கமிஷன் சேலுக்கு** அனுப்புவீர்களேயானால் நாங்கள் எம்மாற்கூடிய வரையில்முயற்சி செய்து புத்தகங்களை விற்றுப் பணமனுப்புவோம்.

புத்தகம் தமிழ் வளர்ச்சி கருதியதாக இருத்தல் வேண்டும். பொது நன்மைக்கு ஏற்றதாகவும் இருத்தல்வேண்டும்.

விளம்பரம்.

கவனியுங்கள்! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!

தமிழ் விருத்தி கருதி அருமையான தமிழ்ப் புத்தகங்கள் பலவற்றை வருவித்து மற்ற இடங்களில் கிடைக்கும் விலைக்குச்சரசமாகவே விற்பனை செய்கின்றோம். எம்மிடத்து சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் இன்னுமுள்ள இலக்கண இலக்கிய புத்தகங்களும் மற்றுமுள்ள நவீன நாவல்களையும் விலை சரசமாகப் பெறலாம். சீக்கிரத்தில் எமதுபுத்தகசாலைக் காட்லாக்குவெளிவரும்.

திருநெல்வேலிப் புராணம்:— இது ஸ்ரீ நெல்லையப்பக் கவிராயரவர்களால் செய்யுள் ரூபமாக முன்பு அமைக்கப்பெற்ற பெரியதொரு புராணத்தை யாவரும் படித்துணருமாறு நடைப்படுத்தப் பெற்றது. இப்புராணத்திற் கூறப்படும் சரிதங்கள் மிகப்பலவாதலால், நம்மவர் அப்பெரு நூலைக்கொண்டு அவற்றைத் தெரிந்துகொள்வதினும் எளிதில் இவ்வசனத்தால் அறிந்துகொள்ளலாம். இப்புராணத்தின் நடை இனிமை வாய்ந்தது. ஒவ்வொரு சருக்கத்தும் அதன் கருத்தமைந்த அதிகவியொன்றமையப் பெற்றது.

கடவுள் வாழ்த்து பாயிரம் முதலியன புதிதாகவும் கற்பனையோடும் அமைந்துள்ளது. உயர்ந்த காகிதத்தில் சிறந்த எழுத்துக்களால் பதிக்கப்பெற்றிருக்கிறது. நல்ல பயிண்டு 55 பாரம் 440 பக்கம்கொண்டது இரண்டுரூபாய்க்கு விற்றது. இப்பொழுது ரூ. 1—0—0க்குவிற்கின்றோம். சொற்ப காப்பிகள் தான் இருக்கின்றன.

மானேஜர்,

செந்தமிழ்ச் செல்வம் அண்டு கோ.

நெ. 31 வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு, திரிசிரபுரம்.

ஆயுள்வேத முறையும் ஐரோப்பிய முறையும் கலந்து செய்த பக்குவங்கள்.

Spermatorrhoea specific:— இது ஓர் நூதன மருந்து சொர்ப்பனஸ்கலிதம், தாது கட்டுமான மில்லா திருத்தல் இவைகளுக்கு கைகண்டது 24 வேளைமருந்தில் குணப்பட்டுவிடும் பத்தியமில்லை ராஜாக்கள் மருந்து. படிக்கும் மாணுக்கர் இதைக் கவனிக்கவும். ரூ. 2-0-0.

குழந்தைகளுக்கு

Health pills:— (குழந்தைகளுக்கு சுகமாத்திரை) புட்டி அணு 4 மாத்திரம். ஜுரம், ஜன்னி, வலிப்பு, மந்தம், வயற்றுப்பொருமல், சகலத்திற்கும் அருமையானது. நன்ருய் மலவிர்த்தியாகும், வாரம் ஒரு முறை இதைக் குழந்தைகளுக்கு உபயோகித்து வரவேண்டியது. அநேக தலைமுறையாய் அனுபோகமான மருந்து.

பல் வியாதிகள்.

பல்வியாதி சகலத்திற்கும் எங்கள் குரு பல்பொடிக்கு நிகரானது வேறில்லவேயில்லை என்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். சகல தந்த நோயும் தீரும். நோய்வராமலும் பாதுகாக்கும் பொடி. இது.

புட்டி அணு 4.

☞ எங்கள் மருந்து சாலையில் சகல வியாதிக்கும் கைகண்ட அவுஷதங்கள் இருக்கிறது. எல்லாம் ஆயுள்வேத முறை கலந்த பக்குவங்கள் தான். வியாதிக்கு ஏற்ற மருந்துகள்.

☞ வியாதிகளைப் பற்றி தெரியப் படுத்திஞல் சரியான மருந்துகள் தபால் மூலம் அனுப்புவோம்.

விலாசம்.

டாக்டர் ஏ. மதுரம்.

திருச்சிஞப்பள்ளி.

பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய **'எலக்டிரிக்பாம்'** என்னும் சூலைநிவாரணித் தைலம். இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதிஞல் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு. பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்யீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், **P. கணேசரத்னம் பிள்ளை**

கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் & **சர்மா & கோ,**

திருச்சிஞப்பள்ளி தெப்பக்குளம்.

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புப்டுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ரத்னௌஷதங்கள்.

மதன மஞ்சரி மாத்திரைகள்.

“நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை.”

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திருடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுந்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துக் தருவவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

தபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஐன்மேந்திரிய நரம்புத்தளர்சசிக்கும் ஆண்தண்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துக்களைப்பற்றியும் எங்கள் **வைத்திய வித்தியா** புஸ்தகத்தை வாசியுங்கள். அது **சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும** பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை **இனமாக** தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

புரொப்ரைடர் ஆயுள்வேதோதய ஔஷதாலயா

No. 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

செந்தமிழ்ச் செல்வத்திற்குப் பொருளுதவி செய்த நன்கொடையாளர்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ சிவசுப்பிரமணிய பிள்ளை மொராசுதார், திரிசிரபுரம்.	50—0—0
,, T. M. முத்துசாமி பிள்ளை நாட்டாண்மை, கள்ளத்தெரு.	15—0—0
,, T. P. மாணிக்கம் பிள்ளை மொராசுதார் மல்லிசாயபுதெரு.	15—0—0
	80—0—0

சந்தாதாரர் பால் வேண்டிக்கொள்வது.

பத்திரிகைகள் சிறப்புற்றோங்கி என்றும் நின்று நிலவுதற்கு சந்தாதாரர்களே காரணம். இது எவர்க்கும் தெரிந்ததே.

ஆகையால் செந்தமிழ்ச் செல்வத்தின் சந்தாதாரர்களாகிய அபிமானமுடைய கனவான்களே! சகோதரர்களே!!

தயை செய்து சந்தாவை அனுப்பி எமக்கு ஊக்கத்தை உண்டாக்கி நமது பத்திரிகையை நின்று நிலவுமாறு செய்ய உங்களை எல்லாம் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இம்மாதம் சந்தாவை அனுப்பாதிருப்பின் அடுத்த மாதம் வி.பி. தபாலில் பத்திரிகை வரும் அப்போது மறுத்துவிட்டு எமக்கு நஷ்டப்படுத்தி எம் நன் முயற்சிக்குத் தளர்ச்சி செய்வோராகாதிருக்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

பத்திராதிபர்.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.